1994 மே 5]

கல்லூரி ஏற்படுத்தினால், விவசாயிகள் மிகவும் வளர்ச்சியுடைய வாய்ப்பு ஏற்படும். எனவே, விவசாயக் கல்லூரி அமைக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு 500 ஏக்கர் நிலம் தேவை. அதற்கு 6 கோடி ரூபாய் பணம் தேவை. இன்றைக்கு நம்முடைய அரசினுடைய நிதிநிலைமையில் அதிகமாக செலவிடக் கூடிய வாய்ப்புகள் இல்லை என்பது மாண்புமிகு உறுப்பினருக்கு நன்கு தெரியும். ஏற்கெனவே, 2000 வேளாண்மைப் பட்டதாரிகள் படித்துப் பட்டம் பெற்று வேலைவாய்ப்புகள் இன்றி வேலை தேடிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தச் சூழ்நிலையில் புதியதாக ஒரு வேளாண்மைக் கல்லூரியைத் துவக்குவது என்பது அரசால் இயலாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 529, திருமதி. வி. ஜி. மணிமேகலை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

529—

அருப்புக்கோட்டை தொகுதி, காரியா பட்டியில் பயிரிட புதிய ரக வெங்காயம் கண்டுபிடித்தல்.

*23157— திருமதி. வி. ஜி. மணிமேகலை:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, காரியா பட்டி ஒன்றியத்தில் வெங்காயம் அதிகமாக விளைவதால் அங்கு பயிரிட புதிய ரக வெங்காயம் கண்டுபிடிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அருப்புக்கோட்டை தொகுதியில் காரியாபட்டி ஒன்றியத்தில் வெங்காயம் அதிகமாக விளைவதால் அங்கு பயிரிட வேண்டிய புதிய ரக வெங்காயம் கண்டுபிடிக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

[1994 மே 5

திருமதி வி. ஜி. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில் பொற்கால ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கும். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் 'இல்லை' என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே தொண்டைப் புண், டிப்தீரியா, டான்சில், லோ பி.பீ. போன்றவைகளைப் போக்கும் தன்மையையும் இரத்த சுத்திகரிப்பு தன்மையையும் கொண்ட வெங்காயத்திற்குப் புதிய ரகத்தைக் கண்டுபிடிக்கும் திட்டமில்லை என்று அமைச்சரவர்கள் கூறிவிட்டார்கள். மேலும் குறிப்பாக கிராமங்களிலே தென் மாவட்டங்களில் தொடர்ந்து இருக்கக் கூடிய தலைவலிக்குக் கூட வெங்காயத்தை அரைத்துப் போட்டால் அந்தத் தலைவலி நின்று போய்விடும் என்ற நிலைமை இருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் நன்கு அறிவார்கள். மேலும் வெளிநாட்டிலே இந்த மாதிரி வெங்காயத்தை அதிகமாக உணவோடு சேர்த்துக் கொள்கிறார்கள். வைரஸ் போன்ற கிருமிகளை எதிர்க்கின்ற வகையில் எதிர்ப்புச் சக்தி கொண்டிருக்கிற இந்த வெங்காயத்தை அதிகமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே காரத் தன்மையைக் குறைத்து வெங்காயத்திலுள்ள சத்துக்களை அப்படியே வைத்து புதிய ரகத்தைக் கண்டுபிடித்தால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிற்கு விளைகின்ற சூழ்நிலையிலே எங்களுடைய தொகுதியான அருப்புக்கோட்டை இருக்கின்ற காரணத்தினாலே வெளிநாட்டு அன்னியச் செலாவணியும் நம்முடைய தமிழகத்திற்குக் கிடைக்கும். மேலும் மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக்குப் புகழுக்குப் புகழ் சேர்க்கும் வகையில் விஞ்ஞான ரீதியிலும் பெரும் வளர்ச்சியைக் கண்டு கொள்வதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவார்கள். அதனால் இந்தச் சூழ்நிலையில் மீண்டும் விவசாயத் துறையிலே பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் உருவாகியிருக்கிறார்கள். அவர்கள் மூலமாக புதிய வெங்காயத்தைக் கண்டுபிடிக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் காரியாபட்டி ஒன்றியத்திற்கு என்று மட்டும் தனி ரகம் கண்டுபிடிக்கக் கூடிய திட்டம் இல்லை என்று சொன்னேன். தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் வெளியிடப்பட்ட கோ. 1, கோ. 2, கோ. கோ. 4 மற்றும் எம்.டி.யூ. 1 ஆகிய ரகங்களை இன்றைக்கு அந்தப் பகுதியிலே விவசாயிகள் பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நல்ல மகசூல் அந்தப் பகுதியிலேயிருந்து வந்து கொண் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல. வெங்காயத்தினுடைய சிறப்புத் தன்மைகளை எல்லாம் சொன்னார்கள். வெங்காயம், சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன

1994 மே 5]

இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை, என்றுகூட தமிழ்ப் பாடல்கள் எல்லாம் சொல்கின்றன. அந்த அளவிற்கு வெங்காயத்தினுடைய தன்மைகளை நம்முடைய முன்னோர்களே அறிந்து இருக்கிறார்கள். நாமும் பயிரிட்டுக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய அளவிற்கு திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்து, ஒரு புதிய ரகம் என்று சொல்லக் கூடிய இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்திலேயிருந்து வெளியிடப்பட்ட புதிய ரகமான பிந்துவை இன்றைக்கு பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அதிகப்படியாக, காய்கறி வகைகளில் வெங்காயம்தான் அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அந்த வெங்காயத்தினுடைய ஒரு புதிய விதையை நேசாட் ஸ்தாபனத்தின் மூலமாக திண்டுக்கல் அலுவலகத்தில் வைத்து அக்ரிபார்ம் பார்க்கெட் என்ற ஒரு புதிய ரகத்தை, பெரிய வெங்காயம், பெல்லாரி வெங்காயம் விதையை இங்கே கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பூசா ஆராய்ச்சிக் கழகத்தில் இந்த பெரிய வெங்காயம் நிறைய ஆராய்ச்சி செய்யப்பட்டு புதிய புதிய விதைகளைர் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதைப் போல, இன்றைக்கு அதிகப்படியாக அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிற அந்த வெங்காயத்தை நல்ல முறையிலே இங்கே பாதுகாத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டும். அந்த வெங்காயம் சீக்கிரம் கெட்டுவிடக் கூடியதாக இருக்கக் கூடாது. அப்படிப்பட்ட ஒரு நல்ல ரக வெங்காயத்தை நம்முடைய ஆராய்ச்சி நிறுவனங்கள் மூலமாக, பல்கலைக் கழகங்கள் மூலமாக, தமிழகத்திற்கு ஏற்ற ரகம் ஒன்றைக் கண்டு பிடிக்க அரசு முன் வருமா? அதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவும், இலங்கையும்—இலங்கையில் அமைதியாக இருந்த காலத்திலே அதிகப்படியாக வெங்காயங்கள் தமிழகத்திலேயிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால், அவைகளைக் கப்பல்களிலே கொண்டு செல்லுகிறபோது போதிய பாதுகாப்பு வசதி இல்லாத காரணத்தால் அழுகக் கூடிய நிலையில் பாதிக்கப்பட்டது. எனவே, அதிக ஏற்றுமதி ஆகக் கூடிய நிலைமையிலேயும் வெங்காயம் இன்றைக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் அறிந்ததற்குப் பின்னால்தான் இன்றைக்கு திண்டுக்கல்...

அண்ணா மாவட்டத்தைத் தேர்வு செய்து, அந்த மாவட்டத்தில் நாபார்ட் உதவியுடன் புதிய ரக வெங்காயம் பிந்துவை அறிமுகம் செயது நாற்றுகள் இட்டு வழங்கி வருகின்றோம். அந்த நாற்றுகளை விவசாயிகளுக்கு மானியத்திலே கொடுத்து, உற்பத்தி செய்து, உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயத்தை மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வகையிலே அரசு திட்டமிட்டு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணபுமிகு அமைச்சர் அவர்கள் 5 வகையான வெங்காயத்தைப் பற்றி இங்கே சொன்னார்கள். அந்த 5 வகையான வெங்காயத்திலே எந்த வகையை உற்பத்தி செய்தால் அதிக மகசூல் கிடைக்கும்? அந்த வெங்காயத்தை உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்கு ஏதோ நாற்றுகள் எல்லாம் கொடுப்பதாகவும் திண்டுக்கல் மாவட்டத்தை எடுத்திருப்பதாகவும் சொன்னார்கள். அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது. நாங்ளெல்லாம் வெங்காயம் போடக்கூடியவர்கள்தான். 2 ஏக்கர், 3 ஏக்கர் வைத்திருக்கக் கூடிய விவசாயிகள் இந்த வெங்காயம் போட முன் வந்தால் அவர்களுக்கு எந்த வகையிலே உதவி செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது, புதிய ரகம் கண்டு பிடிப்பதற்கான கேள்வி. இதிலே இந்தக் கேள்வியா? (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தங்கள் மூலமாக இந்த அவையிலே இப்போதுதான் பதில் சொன்னேன். 5 ரகங்கள்—வேளாண்மை பல்கலைக் கழகத்திலே வெளியிடப்பட்ட கோ 1, கோ. 2, கோ. 3, கோ. 4 மற்றும் எம்டியு. 1 என்று பயிரிடுகிறார்கள். அதனைப்போல மத்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்திலே பிந்து என்ற ரகத்தையும் பயிரிடுகின்றார்கள். இன்றைககு நாபார்ட் நிறுவனம், திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தைத் தேர்வு செய்திருக்கிறது இந்த நாபார்ட் நிறுவனமும் வேளாண்மைத் துறையும் இணைந்து பிந்து என்ற புதிய ரகத்தைப் பயிரிடக்கூடிய, பயிரிட விரும்புகிற விவசாயிகளுக்கு நாற்றுகள் தந்து பயிரிடப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டு மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மாண்புமிகு

பொன்னம்மாள் அவர்கள் அந்தப் பயிரைப் பயிரிட வேண்டும் என்று விரும்பினால் வேளாண்மைத் துறை அலுவலகத்திடம் சென்று நான் பயிரிட விரும்புகிறேன் என்று விருப்பத்தை தெரிவித்தால், அதற்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் இந்தத் துறை செய்து தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண். 530, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

530—

தமிழ்நாட்டில் பாசுமதி அரிசி உற்பத்தி செய்தல்

*24525—திரு. கே. கந்தசாமி:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பாசுமதி அரிசி உற்பத்தி செய்யப் படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை. பாசுமதி அரிசி வாசனை அரிசி ரகத்தில் ஒன்றாகும். தமிழ்நாட்டில் ஜெ.ஜெ. 92 என்ற வாசனை ரக நெல்லைப் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்திற்குத் தேவையான பாசுமதி அரிசி இங்கே உற்பத்தி செய்யப்படாமல், வெளி மாநிலங்களிலிருந்துதான் வரவழைக்கப்படுவதாகத் தெரிகிறது. எனவே, இங்கே பயிர் செய்ய விரும்பும் விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாசுமதி அரிசி என்பது இன்றைக்கு அரியானா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களிலே.